# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 047/நு/2018

ஆணை எண். 62/2018

நாள் : 21/03/2018

திரு க. மருதையா,
சங்கரன் கோவில். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர். – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில், எண்.102, முல்லை நகர் முகவரியில் வசிக்கும் திரு க.மருதையா அவர்களின் 12.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.03.2018 அன்று பெறப்பட்டு, 047/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில், எண்.102, முல்லை நகர் முகவரியில் வசிக்கும் திரு க.மருதையா என்பவர் இம்முறைமன்ற நடுவம் பிறப்பித்த 02.02.2018 நாளிட்ட ஆணை எண்.19/2018, முறையீட்டு மனுதாரருக்கு நிறைவு அளிக்காத நிலையில் 12.03.2018 நாளிட்ட சீராய்வு மனு ஒன்றினை இம்முறைமன்ற நடுவத்தில் தற்பொழுது தாக்கல் செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்த முறையீடு சம்பந்தப்பட்ட நேர்வில் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை மீண்டும் பரிசீலிக்கக் கோரும் சீராய்வு மனுவினை ஏற்பதற்கு 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே, இம்முறைமன்ற நடுவத்தால் பிறப்பிக்கப்பட்ட 02.02.2018 நாளிட்ட ஆணை எண்.19/2018 நிறைவற்றதாக உள்ளது என முறையீட்டு மனுதாரர் கருதினால் உரிய முறையில் மேல் முறையீடு செய்து கொள்ளுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 21 –ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. க. மருதையா,
எண்.102, முல்லை நகர்,
சங்கரன் கோவில் – 627 756.
திருநெல்வேலி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்